*1974 மார்ச் 21]*

*Auto-rickshaws in Coimbatore*

*549 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to stat —

(a) whether the Police detected a number of auto-rickshaws running in Coimbatore without licences in June 1973; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(இ) ஓட்டுவதற்கான உரிமம் இல்லாது, 22 ஆட்டோரிக்ஷா ஓட்டுநர் வண்டிகளை ஓட்டியதைக் கண்டுபிடித்து அவர்கள்மீது மோட்டார் வண்டிகளின் சட்டத்தின் கீழ் தொடர்புள்ள விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*** 550 வினு—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களின் மீட்டர் பழுதுபட்டு விட்டது என சொல்லி பொதுமக்களிடம் மீட்டர் கட்டணத்தை காட்டிலும் அதிகமான பணம் கேட்கிருர்கள் என்பது பற்றிய புகார் மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) கோவையில் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்களின் மீட்டர் குறைபாடு உடையதாக இருக்கிறது என்று சொல்லி பொதுமக்களிடமிருந்து மீட்டர் கட்டணத்தைவிட அதிகமாக தொகை வசூலிக்கப்படுகிறது என்பது குறித்து புகார்கள் ஏதும் வரப்பெறவில்லை. ஆனுல், மீட்டரைப் போடாமலே அதிக கட்டணம் கேட்பதாகப் புகார்கள் வந்துள்ளன. நேர்மை தவறிய ஓட்டுநர்கள்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** அவர்கள் எவ்வளவு காலமாக லைசென்ஸ் எடுக்காமல் ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டிவருகிருர்கள்? மீட்டர் இல்லாமல் ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டி அதிக கட்டணம் பெறுபவர்களின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.